

திருச்சியில் மறைந்த தொழிலதிபர் ராமஜெயத்தின் 63 ஆவது பிறந்தநாளையொட்டி அவரது வாழ்க்கை வரலாறு புத்தகம் மறு வெளியீடு செய்யப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் கே.என்.நேரு, ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரியசாமி, தி.மு.க. துணை பொது செயலாளரும், திமுக மக்களவை கொறடாவுமான ஆ.ராசா எம்.பி., வேளாண்மை துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, காந்திராஜன் எம்.எல்.ஏ., மாவட்ட ஆட்சியர் பிரதீப் குமார், தொழிலதிபர் ரவிச்சந்திரன், இலக்கிய அணி செயலாளர் கவிச்சுடர் கவிதை பித்தன், மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி, வடக்கு மாவட்ட செயலாளர் காடுவெட்டி தியாகராஜன், மாநகராட்சி மேயர் அன்பழகன், சட்டமன்ற உறுப்பினர் ஸ்டாலின் குமார், நூல் ஆசிரியர் நந்தன், நகராட்சி ஆணையர் சரவணன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



திருப்பூர் தி.மு.க. தெற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் உடுமலைப்பேட்டை, சாமராயன்பட்டியில் மாநிலம் அளவிலான ரேக்ளா பந்தயப்போட்டி நேற்று நடந்தது. இதில் தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணிச்செயலாளர், தயாநிதி மாறன் எம்.பி. பங்கேற்று ரேக்ளா வண்டியில் பயணம் செய்தார்.

### காஞ்சிபுரத்தில் – 28-ஆம் தேதி தி.மு.க. கூட்டணிக் கட்சிகளின் தலைவர்கள் பங்கேற்கும்

# தி.மு.க. பவள விழா பொதுக் கூட்டத்தில் ஆயிரக்கணக்கில் அணி திரள்வோம்!

### காஞ்சி வடக்கு மாவட்டக் கழக அணிகளின் நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானம் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிவிப்பு!

காஞ்சிபுரம், செப்.23-

காஞ்சிபுரத்தில் வருகிற 28ஆம் தேதி தி.மு.க கூட்டணிக் கட்சித் தலைவர்கள் பங்கேற்கும் தி.மு.க. பவள விழா மாபெரும் பொதுக் கூட்டத்திற்கு காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் முழுவதிலும் இருந்து இளைஞர் அணி - மாணவர் அணி உள்ளிட்ட கழக அணிகளின் நிர்வாகிகள் ஆயிரக்கணக்கில் அலை கடலென திரண்டு வந்து பங்கேற்போம் என்று காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழக அணிகளின் நிர்வாகிகள் கூட்டத்தில் கலந்தாலோசித்து முடிவு செய்யப்பட்டுள்ளது என்று மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் கூறியுள்ளார்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழக அனைத்து அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் - மாவட்ட துணை அமைப்பாளர்கள் ஆலோசனை கூட்டம் மற்றும் ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் கழக இளைஞர் அணி - மாணவர் அணி அமைப்பாளர்கள் - துணை அமைப்பாளர்கள் கலந்தாலோசனைக் கூட்டம் நேற்று காலை 10.00 மணியளவில் ஆலந்தூர் கத்திப் பாரா மேம்பாலம், ஜோதி திரையரங்கம் அருகில் அமைந்துள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில் மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையில் நடைபெற்றது.

தொடக்கத்தில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் எல்.பிரபு ஆகியோர் அனைவரையும் வரவேற்றனர்.

இக்கூட்டத்தில் மாவட்டப் பொருளாளர் வெ.விசுவநாதன், மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் என்.கனகராஜ், பகுதி செயலாளர்கள் பி.குணாளன், என்.சந்திரன், த.ஜெயக்குமார், நகரச் செயலாளர்கள் டி.பாபு, எம்.கே.டி.கார்த்திக், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் உதயா கருணாகரன், மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் ச.சசிகலா, மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் பா.ஞானப்பிரகாசம், மாவட்ட விவசாயத் தொழிலாளர் அணி அமைப்பாளர் செந்தில் தேவராஜ், மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் ஆர்.ஆர்.ஜெயராம் மார்த்தாண்டன், மாவட்ட சிறுபான்மையினர் அணி அமைப்பாளர் எஸ்.ஆல்பர்ட், மாவட்ட ஆதிதிராவிடநலக்குழு அணி அமைப்பாளர் தி.க. பாஸ்கரன், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கு. வினோத்குமார், மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர் டி.பி.செந்தில்குமார், மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் பொன். ரமேஷ்கவி, மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை டி.எஸ்.எம்.ஜெயகரன், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் எஸ். கர்ணன், மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் ஆர். கோவிந்தன், மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர் ஜான் தினகரன், மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் கே. ஆர்.ஆனந்தன்ம் மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் டி. ஆர்.சாரதி பெரியநாயகம், மாவட்ட அமைப்புசாரா ஓட்டுநர் அணி தலைவர் தங்கம் வாட்ஸ், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் தையூர் வி.விஜயகுமார், ப.இராமமூர்த்தி, டி.கே.கமலக்கண்ணன், கே.மணிகண்டன், கோ.ஜானகிராமன்,

மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர்கள் ஆலந்தூர் கலாநிதி குணாளன், தாம்பரம் விக்கி (எ) விக்னேஸ்வரன், வே. சங்கீதா, எஸ்.ஜெகதீப் மற்றும் வண்டலூர் தே.ஜெகன் உள்ளிட்ட கழக அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் இக்கூட்டத்தில் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

தி.மு.கழக பவள விழாவையொட்டி தி.மு.க. கூட்டணிக் கட்சித் தலைவர்கள் பங்கேற்று சிறப்பிக்கும் மாபெரும் பொதுக்கூட்டம் வருகிற 2892024 சனிக்கிழமை அன்று மாலை 5.00 மணியளவில், பேரறிஞர் அண்ணா பிறந்த காஞ்சிபுரத்தில் உள்ள பச்சையப்பன் ஆடவர் கல்லூரி விளையாட்டு திடலில் நடைபெறுகிறது.

நாம் நாளும் போற்றி வணங்கும் கழகத் தலைவர் - தமிழக முதல்வர் தலைவர் தளபதி அவர்கள் சிறப்புரையாற்ற உள்ள இம்மாபெரும் பொதுக்கூட்டத்தில் தி.மு.க. கூட்டணிக் கட்சிகளின் தலைவர்கள் அனைவரும் பங்கேற்று வாழ்த்துரை வழங்குகின்றனர்.

அண்ணா பிறந்த காஞ்சிபுரம் மாநகரில் தி.மு.க. கூட்டணிக் கட்சிகளின் தலைவர்கள் பங்கேற்று சிறப்பிக்கும் தி.மு.கழக பவள விழா பொதுக்கூட்டத்தை காஞ்சிபுரம் வடக்கு மற்றும் தெற்கு மாவட்ட தி.மு.க. இணைந்து பார்ப்போர் அனைவரும் வியக்கும் வகையில் மிகவும் பிரம்மாண்ட மேடை அமைத்து எழுச்சியுடன் மாநாடு போல நடத்தப்பட உள்ளது.

காஞ்சிபுரத்தில் மிகவும் கோலகலமாக நடைபெற உள்ள தி.மு.க. கூட்டணிக் கட்சித் தலைவர்கள் அனைவரும் பங்கேற்கும் கழக பவள விழா மாபெரும் பொதுக் கூட்டத்தில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் இருந்து மாநகர - ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் - வார்டு கிளைக் கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், கழக அணிகளின் மாவட்ட - ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் நிர்வாகிகள், உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள் உள்ளிட்ட ஒட்டுமொத்த கழகத்தினரும் பல்லாயிரக்கணக்கில் அலைகடலென அணிதிரண்டு வந்து பங்கேற்பது என்றும்,

இதுவரை, இதுபோன்ற பிரம்மாண்டமான பொதுக் கூட்டம் நடைபெற்றது இல்லை என்று தமிழக அரசியல் வரலாற்றில் புதியதோர் சரித்திர சாதனை படைத்திடும் வகையில், ஏற்பாடுகள் செய்யப்பட்டு உள்ள இந்த எழுச்சி மிக்க பிரம்மாண்டமான பொதுக் கூட்டத்தில்,

செப்டம்பர் 28ஆம் தேதி சனிக்கிழமை அன்று மாலை 4.00 மணிக்கெல்லாம் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள ஒட்டுமொத்த கழகத்தினரும் அலைகடலென ஆர்ப்பரித்து திரண்டு வந்து பங்கேற்று சிறப்பித்து புதியதோர் வரலாற்று சாதனையை படைப்போம் என்றும் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகம் ஒருமனதாக தீர்மானிக்கிறது.

இவ்வாறு அமைச்சர் தா.மோ.அன்பரசன் கூறியுள்ளார்.

### கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. – அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! டி.எஸ்.பி.இராஜகோபால் தலைமை!

# அம்பத்தூர் தெற்கு பகுதிக் கழகம் சார்பில் பவள விழா! முப்பெரும் விழா!

### ஆசிரியர் கி.வீரமணி – நடிகர் சத்யராஜ் – பேராசிரியர் மு.அப்துல் காதர் சிறப்புரை!

சென்னை, செப்.23-

சென்னை கிழக்கு மாவட்டம் அம்பத்தூர் தெற்குப் பகுதி தி.மு.க. சார்பில், தி.மு.க. பவள விழா, முப்பெரும் விழா 2024. திராவிடத் தொடர் 3 திராவிட நெடுந்தொடர்! தேசத்தின் ஒளிச்சுடர்!! எனும் நிகழ்ச்சி வருகின்ற (27.09.2024) வெள்ளிக்கிழமை மாலை 6.00 மணிக்கு, கோல்டன் பிளாட் எதிரில் உள்ள சின்னசாமி கல்யாண மண்டபதில், அம்பத்தூர் தெற்குப் பகுதி செயலாளர் டி.எஸ். பி. இராஜகோபால் தலைமையில் நடைபெறுகிறது.

கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி, மாவட்டச் செயலாளர் அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மேயர் பிரியா ராஜன், சட்டமன்ற உறுப்பினர் ஜோசப் சாமுவேல் மற்றும் மண்டலக் குழுத் தலைவர் பி.கே. மூர்த்தி, அம்பத்தூர் கிழக்குப் பகுதிச் செயலாளர் எம்.டி.ஆர். நாகராஜ், எல். பி.எப்.மோகன், டாக்டர் ஏ.பி. பூர்ணிமா, ரமேஷ் (எ) நீலகண்டன், டாக்டர் ஜி. சாந்தகுமாரி, ஜெ.பாலமுருகன், ஜி.வி.நாகவள்ளி, கு. கிருஷ்ணமூர்த்தி, து.ஆயிரம், மு.நடராஜன், து.செல்வராஜ், ஆர்.கதிரவன், கவிதா செல்லதுரை, கு.சங்கர், வட்டக் கழகச் செயலாளர்கள்: த.பிரகாஷ்குமார், சி.சீனிவாசன், நா.நெப்போலியன், இரா.டீக்கா, மாமன்ற உறுப்பினர்கள் எஸ்.உமா, உஷா நாகராஜ், கே.பொற்கொடி, எம்.கமல் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

அம்பத்தூர் தெற்குப் பகுதி மாவட்ட பிரதிநிதிகள்: பொ.சேதுராமன் (எ) பொன் சேட்டு, ஏ.கே.டி. பாஸ்கர், பா.மாறன், டி. சுரேஷ் பாபு, ஆர்.ஜெயராமன், சோ.மதியழகன், எஸ். கே. சதீஷ்குமார், எஸ்.எஸ். சவரிமுத்து, எஸ்.எம். முருகானந்தம், ஏ.வி. தட்சிணாமூர்த்தி ஆகியோர் வரவேற்கின்றனர்.

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி, நடிகர் சத்யராஜ், பேராசிரியர் மு.அப்துல் காதர் ஆகியோர் புகழுரையாற்றுகின்றனர்.

கழகத் துணை அமைப்புச் செயலாளர் ப. தாயகம் கவி எம்.எல்.ஏ., அ.வெற்றி அழகன் எம்.எல்.ஏ., அம்பத்தூர் தொகுதி பொறுப்பாளர் பி.டி.சி. செல்வராஜ் ஆகியோர் கூட்டத்தில் பங்கேற்றுப் பேசுகின்றனர்.

கழக மாநில நிர்வாகிகள் ப.ரங்கநாதன், கே.சந்துரு, கே.எஸ்.ரவிச்சந்திரன், சங்கரி நாராயணன், தமிழன் பிரசன்னா, எஸ்.மணிமுடி, வே.உமாகாந்த், கே.எஸ். எம். நாதன், எம்.விஜயகுமார், என்.பி.எம். ஷேக்அப்துல்லா, சி.மகேஷ்குமார், பரிதி இளம் சுருதி, ஆர்.வரதன்,

மாவட்ட நிர்வாகிகள் கோ.ஏகப்பன், தேவஜவகர், ஜி. மகாதேவன், புனிதவதி எத்திராசன், இசட். ஆசாத், மண்டல குழு தலைவர்கள் கூ.பீ. ஜெயின், சரிதா மகேஷ்குமார்,ஸ்ரீ ராமலு, பகுதி செயலாளர்கள் வே. வாசு, ஐ.சி.எப். வ. முரளிதரன், எ.நாகராசன், சொ. வேலு, வி. சுதாகர், எம். சாமிகண்ணு, செ. தமிழ் வேந்தன், எஸ். ராஜசேகர், எஸ். முரளி, பொதுக்குழு உறுப்பினர்கள் கோ. மணி, எஸ். பன்னீர்செல்வம், டி. வி. செம்மொழி, பி.ஜெ. துளசிங்கம், பி. உதயசங்கர், சாவித்திரிவீரராகவன், எம். இப்ராஹிம்கனி, அ. நிர்மலாதேவி, இரா. கலைச் செல்வி, மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் சி.மகேஷ்குமார், டி. லோகேஷ், பா. ஜெகதீஷ், க. வினோத், ஜி.ஜெ.பிரபு, எஸ். தனசேகர், ஆர்.டி. சங்கர்நானா, வானவில்விஜய், நா.துலுக்காணம், ஜி.தாமோதரன், துரைகண்ணன், சுதா தீனதயாளன், ராஜேஸ்வரி ஸ்ரீதர், பி. விஜயகுமார், எம். பெரோஸ்கான், எம். விநாயகம், ஆர்.எஸ்.சித்திக், க. பா.பிரதீப்குமார், ம. அசோக்குமார், எல், சம்பத் குமார், கா.ராஜ்முகமது. இரா.வீரமணி,

அம்பத்தூர் வடக்கு, கிழக்கு பகுதி வட்டக் கழக செயலாளர்கள் வி.ரவீந்திரன், பு.வீரா, வெ.ராதாகிருஷ்ணன், மு.ரகு, த, கண்ணபிரான், மு. சண்முகம், ஆ.சுந்தர்ராஜ், சீ.லோக நாதன், சு.மோகன் குமார், மு. விஜயகுமார், த. வ. லால் , அம்பத்தூர் வடக்கு, கிழக்கு பகுதி கழக நிர்வாகிகள்: மா. பச்சையப்பன், அ.செல்வம், க.முரளிபாபு, க. கதீஜா, மா.ரமேஷ், து. ஜெக நாதன்,

பி.ஆர். இளங்கோவன், பா. பொற்செழியன், ரா.லட்சுமி ரங்கசாமி, மேனாம்பேடு இ. ராமு, மாவட்ட பிரதிநிதிகள்: பொன். நவராஜ்ரவி, எம். குணசேகரன், ப.மதி, ஆ. இரா.அருண், கோ.சேகர் லால், க.ஜீவா, எஸ்.பி. அரிகிருஷ்ணன், மா.குப்புசாமி, எம்.ஹரிகிருஷ்ணன், பி.வி. மூர்த்தி, கே.செல்வம்,கோ. முத்துக்குமாரசாமி, கோ. ராஜ்குமார், ந.குமரவடிவேல், ச.கோதண்டன், கோ. இன்பசேகரன், ஆர். விமலன், ஜெ.ஐயப்பன், எஸ். பரமசிவம், தொகுதிக்குட்பட்ட பி.எல்.ஏ.-2 பாகநிலை முகவர்கள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வட்டக் கழக நிர்வாகிகள், பி.எல்சி. முகவர்கள், கழக முன்னோடிகள் உள்பட பலரும் இந்நிகழ்ச்சியில் கலந்துக்கொள்கின்றனர்.

வட்டச் செயலாளர் எம்.இ.சேகர் நன்றி கூறுகிறார்.

### மாவட்டச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் தலைமையில்

# நாமக்கல் மேற்கு மாவட்ட மாணவர் அணி நேர்காணல்!

### அமைச்சர் மா.மதிவேந்தன் – எஸ்.மோகன் பங்கேற்பு!

நாமக்கல், செப். 23 -

நாமக்கல் மேற்கு மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர் மாணவர் அணி நேர்காணல் மற்றும் ஆலோசனைக் கூட்டம் கழக மாணவர் அணி செயலாளர் சி.வி. எம்.பி.எழிலரசன் எம். எல்.ஏ அறிவிப்பின்படி நாமக்கல் மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட பரமத்தி வேலூர், திருச்செங்கோடு, குமாரபாளையம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர் மாணவர் அணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் நேர்காணல் மற்றும் கல்லூரியில் தமிழ் மாணவர் மன்றம் அமைக்க ஆலோசனைக் கூட்டம் மதியம் 1.00 மணி அளவில் நாமக்கல் மேற்கு மாவட்ட கழக அலுவலகம், திருச்செங்கோடு, வேலூர் ரோடு, தளபதியார் அரங்கில் மாவட்ட கழகச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாநில மாணவர் அணி இணைச் செயலாளர் எஸ்.மோகன், துணைச் செயலாளர்கள் சேலம்.ரா.தமிழரசன், கா. பொன்ராஜ், வி.ஜி.கோகுல், கா. அமு தரசன், பி. எம். ஆனந்த் ஆகியோர்கள் முன்னிலையில் நேர்காணல் நடைபெற்றது.

இதில் வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா. மதிவேந்தன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

நேர்காணலில் 200க்கும் மேற்பட்ட இளைஞர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்.

மாவட்ட மாணவரணி அமைப்பாளர் பாலசுப்ரமணியம் துணை அமைப்பாளர்கள் ஐயப்பன் (எ) பெருமாள் தங்கமணி, ராகேஷ் கண்ணன், லாவண்யா மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று முன்தினம் (21.09.2024) திருவல்லிக்கேணி. பார்த்தசாரதி சுவாமி திருக்கோயிலில் இந்து சமய அறநிலையத்துறை சார்பில் செயல்படுத்தப்படும் மூத்த குடிமக்களுக்கான புரட்டாசி மாத வைணவத் திருக்கோயில் ஆன்மிகப் பயணத்தில் பங்கேற்கும் பக்தர்களுக்கு பயண வழிப்பைகளையும், திருக்கோயில் பிரசாதங்களையும் வழங்கி ஆன்மிகப் பயணத்தை கொடியசைத்து தொடங்கி வைத்தார். உடன் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி.சந்தரமோகன், துறை ஆணையர் பி.என்.ஶ்ரீதர், இணை ஆணையர்கள் ச.இலட்சுமணன். கி.ரேணுகாதேவி. திருக்கோயில் துணை ஆணையர்/செயல் அலுவலர் திருமதி சி.நித்யா மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம்

# திருப்பெரும்புதூர் வடக்கு ஒன்றிய தி.மு.க. அவசரச் செயற்குழுக் கூட்டம்!

### ஒன்றியச் செயலாளர் எஸ்.டி.கருணாநிதி அறிக்கை!

காஞ்சிபுரம், செப். 23

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், திருப்பெரும்புதூர் வடக்கு ஒன்றிய தி.மு.க. அவசரச் செயற்குழுக் கூட்டம் இன்று (23.09.2024 திங்கட்கிழமை) காலை 10 மணிக்கு, சுங்குவார்சத்திரம், திருப்பெரும்புதூர் வடக்கு ஒன்றிய தி.மு.க. அலுவலகத்தில் ஒன்றியக் கழகச் செயலாளர் எஸ்.டி.கருணாநிதி தலைமையில் நடைபெறுகிறது.

கூட்டத்தில் ஜெ.சிவபாதம் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

பி.கலைமோகன், தி.பிரபாகரன், நளினா சின்ன கண்ணு, மா.மணிவண்ணன், ச.வேலுமணி, ஏ. நாசர், இ.முனிகிருஷ்ணன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் மாவட்டக் கழக நிர்வாகிகள் பி. ரவி, இரா.பிரகாசம், நா. சத்யா, ஏ.முரளிதரன், இரா. வெங்கடேசன், எஸ்.டி.கே. சபரி ராஜா, ஜி.எஸ்.குமார், ஆகியோர் கலந்து கொள்ள உள்ளனர்.

எனவே ஒன்றியத்திற்கு உட்பட்ட அனைத்து நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், பொதுமக்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் : காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில் நடைபெற உள்ள கழக பவள விழா பொதுக்கூட்டத்தில் நமது கழகத் தலைவர் கலந்து கொண்டு சிறப்புரையாற்று கிறார்.

இந்நிலையில் கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொள்வது குறித்தும், சிறப்பான வரவேற்பு வழங்குவது குறித்தும் இக்கூட்டத்தில் கலந்தாலோசனை நடைபெறுகிறது.

ஒன்றிய வடக்கு இளைஞர் அணி அமைப்பாளர் பாலா (எ) பால்ராஜ் நன்றி கூறுகிறார்.

இவ்வாறு திருப்பெரும்புதூர் வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் எஸ்.டி.கருணாநிதி தெரிவித்துள்ளார்.



காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் – துணை அமைப்பாளர்கள் மற்றும் இளைஞர் அணி மாணவர் அணி ஒன்றிய நகர பகுதி பேரூர் கழக அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கலந்தாலோசனைக் கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் உரையாற்றினார். உடன் மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் என்.கனகராஜ், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் எல்.பிரபு உள்ளிட்ட மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.